இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 84 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 17 – ஞாயிற்றுக்கிழமை 03 நவம்பர் 2024 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 84 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 17 - Sunday 03 November 2024 - Madurai 8 Pages ₹ 5.00


### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் தொழிற்சாலைகள் பெருகுகிறது!

# ஒரகடத்தில் உலகளாவிய தொழில் மையம்!

## இருங்காட்டுக்கோட்டையில் செயல்பட்டு வரும் 'செயிண்ட் கோபைன்' நிறுவனம் ரூ. 2,858 கோடியில் அமைக்கிறது!

**சென்னை, நவ. 3 - கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட சென்னையை அடுத்துள்ள ஒரகடம் சிப்காட் தொழில் பூங்காவில் 2 ஆயிரத்து 858 கோடி ரூபாய் செலவில் உலகளாவிய மையம் அமைப்பதற்கான சுற்றுச்சூழல் அனுமதிகோரி செயிண்ட் கோபைன் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.**



பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த முன்னணி கண்ணாடி தயாரிப்பு நிறுவனமான செயின்ட் கோபைன், சென்னையை அடுத்துள்ள ஒரகடம் சிப்காட் தொழில் பூங்காவில் இயங்கி வருகிறது. ஒரகடம் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள இந்த ஆலைக்கு 127 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த இடத்தில், சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வளர்ந்து வரும் தொழில் மற்றும் இந்தியாவில் இந்நிறுவன தயாரிப்புகளுக்கு இருக்கும் தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு செயின்ட் கோபைன் உலகளாவிய உற்பத்தி மையத்தை அமைக்க உள்ளது. இதன் மூலம், இந்தியாவின் கண்ணாடித் தொழில் வளர்ச்சிக்கு இந்நிறுவனம் பெரும்பங்காற்ற உள்ளது.

இந்த உற்பத்தி மையத்திற்கு கடந்த ஆகஸ்ட் மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார். இந்த உலகளாவிய மையத்தில் Glasswool, Gypsum Plasterboards, Plasters, Acoustic Ceilings, Float Glass, Solar Glass, Adhesives, Sealants உள்ளிட்டவை உற்பத்தி செய்யப்பட உள்ளது.

இந்நிலையில், ஒரகடம் சிப்காட் தொழில் பூங்காவில் 2 ஆயிரத்து 858 கோடி ரூபாய் செலவில் உலகளாவிய மையம் அமைப்பதற்கான சுற்றுச்சூழல் அனுமதிகோரி செயிண்ட் கோபைன் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.

### வரி வருவாய்:

## நியாயமாக பகிர்ந்தளிக்க வேண்டும்!

### சித்தராமையா வலியுறுத்தல்!

பெங்களூரு, நவ. 3 -



வரி வருவாயை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிப்பதில் ஒன்றிய அரசு நியாயமான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும் என கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா வலியுறுத்தி உள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற கர்நாடக மாநில அமைப்பு தின நிகழ்ச்சியில், அம்மாநில முதலமைச்சர் சித்தராமையா கலந்து கொண்டார்.

அப்போது பேசிய அவர், ஒன்றிய அரசிடம் இருந்து கர்நாடக மாநிலம் பெறும் நிதியை விட, தேசிய வரி வருவாயில் கர்நாடகாவின் பங்களிப்பு அதிகமாக உள்ளதாகத் தெரிவித்தார்.

கர்நாடகாவில் இருந்து 4 லட்சம் கோடி ரூபாய்கு மேல் வரிகளை பெறும் ஒன்றிய அரசிடம் இருந்து 60 ஆயிரம் கோடி ரூபாய் வரை மட்டுமே திரும்பக் கிடைப்பதாகவும் கூறிய அவர், இது 100 ரூபாயை பெற்றுக் கொண்டு வெறும் 15 பைசாவை திரும்ப அளிப்பதாகும் என்றும் தெரிவித்தார்.

கர்நாடகா ஒரு முன்னேறிய மாநிலம் என்பதற்காக கூட்டாட்சி அமைப்பின் கீழ் இழைக்கப்படும் அநீதியை ஏற்க முடியாது என்றும் தெரிவித்த சித்தராமையா, வரி வருவாயை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிப்பதில் ஒன்றிய அரசு நியாயமான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

### 19 இந்திய நிறுவனங்கள் மீது

## அமெரிக்கா பொருளாதாரத் தடை!

வாஷிங்டன், நவ. 3 - ரஷ்யாவுக்கு மின்னணு சாதனங்களை விற்பனை செய்ததாக 19 இந்திய நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

கடந்த 2022ம் ஆண்டு பிப்ரவரி முதல் ரஷ்யா, உக்ரைன் இடையே போர் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக ரஷ்யா மீது அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் பல்வேறு பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

ரஷ்யாவுக்குத் தேவையான மின்னணு சாதனங்கள், ஆயுத உதிரிபாகங்கள், ராணுவ தளவாடங்கள் உள்ளிட்டவை வடகொரியா, சீனா, இந்தியா, துருக்கி, மலேசியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், கஜகஸ்தான் நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களிடம் இருந்து மறைமுகமாக கொள்முதல் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதை அமெரிக்க அரசு கண்டுபிடித்து சுமார் 400க்கும் மேற்பட்ட நிறுவனங்கள், தனிநபர்கள் மீது பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

இதில் இந்தியாவைச் சேர்ந்த 19 நிறுவனங்கள், தனிநபர்களும் இடம்பெற்றுள்ளனர். அசென்ட் அவிடேசன் அண்டியா, மஸ்க் ட்ரான்ஸ், டி.எஸ்.எம்.டி. குளோபல், புயூடிரிவோ உள்ளிட்ட நிறுவனங்கள் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைப் பட்டியலில் உள்ளன.

வரும் 5ம் தேதி அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இதை கருத்தில் கொண்டே ஆளும் ஜனநாயக கட்சியின் அரசு 400 நிறுவனங்களுக்கு பொருளாதார தடை விதித்திருப்பதாகவும், இது அரசியல்ரீதியான நடவடிக்கை என்றும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

### நாகை - இலங்கை கப்பல் போக்குவரத்து

## வாரத்திற்கு 5 நாட்களாக அதிகரிப்பு!

நாகை, நவ. 3 - நாகையில் இருந்து இலங்கை செல்லும் பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை வாரத்துக்கு 5 நாள்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி இந்த்ஸ்ரீ சுப்பல் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: -

நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகம் இடையே கடந்த ஆகஸ்ட் 16ஆம் தேதி சிவகங்கை பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கியது.



போதிய பயணிகள் முன்பதிவு இல்லாததால், நாள்தோறும் நாகை துறைமுகத்திலிருந்து இயக்கப்படுவதாக இருந்த இந்த கப்பல் வாரத்தில் 3 நாட்கள் மட்டும் இயக்க இயக்க முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில் கப்பல் போக்குவரத்து இருந்து வந்தது.

இந்நிலையில் பயணிகளின் வருகை அதிகரிப்பை தொடர்ந்து கூடுதல் நாட்கள் கப்பலை இயக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். அதனை ஏற்று கடந்த மாதம் 21ந்தேதி முதல் சனிக்கிழமைகளிலும் கப்பல் இயக்கப்பட்டது.

இதற்கிடையே பயணிகள் வருகை அதிகரித்து வருவதால் வரும் 8ம்தேதி முதல் வாரத்தில் செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு உள்ளிட்ட 5 நாட்கள் கப்பல் இயக்கப்படும். பயணிகள் www.sailindsri.com என்ற இணையதள பயணச்சீட்டை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### வயநாட்டில்

## ராகுல் காந்தி - பிரியங்கா காந்தி பிரச்சாரம்!

### இன்று வாக்குச் சேகரிக்கின்றனர்!

வயநாடு, நவ. 3 - வயநாடு தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் பிரியங்கா காந்தியை ஆதரித்து ராகுல் காந்தி இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

கேரள மாநிலம் வயநாடு மக்களவைத் தொகுதி இடைத்தேர்தல் வரும் 7ம் தேதி நடைபெறுகிறது. காங்கிரஸ் சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி போட்டியிடுகிறார்.

முதல்முறையாக தேர்தல் களத்திற்கு வந்துள்ள பிரியங்கா காந்தி, கடந்த வாரம் தனது பிரச்சாரத்தை தொடங்கினார்.





அதன் தொடர்ச்சியாக, வயநாட்டில் இன்று முதல் மீண்டும் மக்களைச் சந்தித்து ஆதரவு திரட்டுகிறார். மனந்தவாடியில் இன்று நடைபெறும் பொதுக்கூட்டத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும், பிரியங்கா காந்தியும் பங்கேற்கின்றனர்.

இதேபோல், கல்பெட்டா, சுல்தான் பதேரி ஆகிய பகுதிகளிலும் பிரியங்கா காந்தி தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட உள்ளார்.

### நீலகிரி, கோவை உள்ளிட்ட

## 19 மாவட்டங்களில் கனமழை!

### வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு!

சென்னை, நவ. 3 - சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக தேனி மாவட்டம் பெரியாறு, தென்காசி மாவட்டம் ஆயிக்குடி பகுதியில் தலா 7 சென்டி மீட்டரும், ராமநாதபுரத்தில் 6 சென்டி மீட்டரும் மழை பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.





தென்தமிழக கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதாகவும், இதன் காரணமாக இதன்காரணமாக இன்று தமிழ்நாடு புதுச்சேரியில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மழை பெய்யக்கூடும்.

நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், கரூர், தூத்துக்குடி, ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இன்றைய தினம் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### லடாக்கில் புதிய ஆய்வு மையத்தை தொடங்கியது இஸ்ரோ!

லடாக், நவ. 3 – விண்வெளிக்கும், வேற்று கிரகங்களுக்கும் மனிதர்களை அனுப்பும் திட்டத்தின் ஒரு பகுதியாக, லடாக்கில் புதிய ஆய்வு மையத்தை இஸ்ரோ தொடங்கியுள்ளது.

விண்வெளிக்கு வீரர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தின் ஆய்வுகளை இந்திய விண்வெளி ஆய்வு மையம் தொடங்கி உள்ளது. அதேபோல், விண்வெளி மையம் ஒன்றை அமைக்கவும் இஸ்ரோ முயற்சி மேற்கொண்டுள்ளது.

வேற்று கிரகங்களுக்கு விண்வெளிக் கலன்களை அனுப்பவும் அடுத்தடுத்து திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ககன்யான் திட்டத்தில் விண்வெளிக்கு அனுப்புவதற்காக விமானப்படையை சேர்ந்த 4 வீரர்களை தேர்வு செய்து, அவர்களுக்கு பயிற்சியை இஸ்ரோ அளித்து வருகிறது. இத்திட்டங்களின் ஒரு பகுதியாக, லடாக்கில் உள்ள லே பகுதியில் சிறப்பு ஆய்வுகளை இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடங்கியுள்ளனர். இதற்காக அங்கு அனலாக் ஆய்வு மையத்தை இஸ்ரோ அமைத்துள்ளது. இந்த ஆய்வு மையத்துக்கு ஹேப்1 என்று பெயரிடப்பட்டுள்ளது என இஸ்ரோ வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 'திராவிட மாடல்' அரசின் திட்டங்களின் நிலைகுறித்து

## கோவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

### நவ. 5, 6 தேதிகளில் நடைபெறுகிறது!

**சென்னை, நவ. 3- திராவிட மாடல் அரசின் திட்டங்களின் நிலைகுறித்து கோவையில் வருகிற நவம்பர் 5 மற்றும் 6 ஆகிய இரு தேதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள ஆய்வு நடத்துகிறார். அதைத் தொடர்ந்து மற்ற மாவட்டங்களில் கள ஆய்வை நடத்தப் போவதாகவும் முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.**

இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பக்கத்தில்,

"அமெரிக்கப் பயணத்திற்கு முன்பாகவே நான் கேட்டுக் கொண்டபடி, அமைச்சர்கள் பலரும், அவரவர் துறை சார்ந்த மற்றும் மாவட்டங்களில் உள்ள பணிகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை அளித்திருந்தனர்.

எதிர்வரிசையிலே இருப்பவர்கள், திராவிட மாடல் அரசு மீது அடிப்படையில்லாத அவதூறுகளைப் பரப்ப முனைந்து, அதிலும் முனை முறிந்து போயிருக்கிறார்கள்.

திராவிட மாடல் அரசு தனது திட்டங்களை முழுமையாக நிறைவேற்றும் என்ற நம்பிக்கையுடன் உள்ள தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில், பண்டிகை நாட்கள் முடிவடைந்த பிறகு, நவம்பர் 5, 6 தேதிகளில் கோவைக்குச் சென்று கள ஆய்வினைத் தொடங்க இருக்கிறேன்.

மற்ற மாவட்டங்களிலும் தொடரவிருக்கிறேன். **கள ஆய்வும் தொடரும், திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களும் தொடரும்!**

"அரசு சார்ந்த பணிகளை மட்டும்தான் கவனிப்பீர்களா?" என்று உடன்பிறப்புகளான உங்களின் மனக்குரலை 'உங்களில் ஒருவனான' நான் அறிவேன். கள ஆய்வுப் பணிகளை அந்தந்த மாவட்டங்களில் நிறைவு செய்தபிறகு, கழகப் பணிகளையும் ஆய்வு செய்வேன்.

கண்மணிகளாம் உடன்பிறப்புகளையும் நேரில் கண்டு நெஞ்சம் மகிழ்வேன்!"

- என்று உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டிருந்தார்கள்.

தமது இவ்வறிவிப்புக்கொப்ப, திராவிட மாடல் ஆட்சியில் அறிவிக்கப்படும் திட்டங்களின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்திட கோவையில் 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.